வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

உதயன்

சுடர் : 38
கதிர் : 76

வெள்ளிக்கிழமை 10 பெப்ரவரி 2023

தை 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50
பக்கங்கள் 12

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்?

## நீதிமன்றில் இன்று வழக்கு விசாரணை
## தேர்தல் ஆணைக்குழுவும் இணக்கம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்கும் அறிவிப்பு இன்று வெளியாகலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. நீதிமன்றில் இன்று இடம்பெறும் வழக்கு விசாரணைகளின் பின்னர் ஒத்திவைப்புத் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படக்கூடும் என்று அந்த வட்டாரங்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டன.

»11

## அரசாங்க அச்சகத்துக்கு ரூபா 40 மில். விடுவிப்பு!

### வாக்குச்சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, பெப். 10
அரசாங்க அச்சகத்துக்கு 40 மில்லியன் ரூபாவை திறைசேரி நேற்றுமுன்தினம் விடுவித்துள்ளது. இதனையடுத்து தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணி ஆரம்பமாகியுள்ளது.

»10

## பண்ணைக்கடலில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், பெப். 10
பண்ணைக் கடலில் பெண் ஒருவரது சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது.
பண்ணைப் பகுதியில் நின்ற மக்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம்

»11

## ஹெரோய்னை நுகர்ந்த 10 பேர் யாழில் கைது

யாழ்ப்பாணம், பெப். 10
ஹெரோய்னை நுகர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து பத்துப்பேர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். கைதுசெய்யப்

»11

## யாழ். மாவட்ட அபிவிருத்தி; ரணில் இன்று அவசரப் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச அதிகாரி

»11



கலாசார மத்திய நிலையத்தை கையளிக்க

## பலாலியால் வந்திறங்கியது இந்திய அமைச்சர் குழு!

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தைக் கையளிப்பதற்காக இந்திய அமைச்சர் குழு பலாலி சர்வதேச விமான நிலையத்தினூடாக நேற்று வந்திறங்கியது.

»11

## சுதந்திரநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுங்கள்

### தமிழ் எம்.பிக்களிடம் நேரடியாக கூறினார் ஜனாதிபதி ரணில்



யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறவுள்ள சுதந்திரநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைப்பு

»11

யாழில் நடைபெறும்

## சுதந்திரதின நிகழ்வையும் தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை மாலை இடம்பெறவுள்ள சுதந்திரநாள் நிகழ்வையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலை எதிர்கொள்ளும் கட்சிகள் புறக்கணிக்கவுள்ளன. இது தொடர்பில்

»11

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதான

## மருத்துவர் சிவரூபனுக்கு நேற்று நீதிமன்று பிணை

கிளிநொச்சி, ஏப். 10
பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட மருத்துவர் சிவரூபனை நேற்றுப் பிணையில் விடுவித்தது கிளிநொச்சி நீதிமன்றம்.
குறித்த வழக்கின் விசாரணைகள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்று முன்னெடுக்கப்

»10

## யாழ்ப்பாணத்தில் நாளை 3 கட்டமாக நிகழ்வுகள்!

### இந்திய மத்திய அமைச்சரும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 10
'யாழ்ப்பாண கலாசார மையம்' கையளிப்பு, இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகள் என்பன நாளை சனிக்கிழமை மூன்று கட்டங்

»11

## மகாசங்கத்தினர் எதிர்ப்பதால் சமஷ்டியைக் கைவிடுங்கள்!

### தமிழ்த் தலைவர்கள் இறங்கிவரவேண்டுமென 'திருவாய் மலர்ந்தருளினார்' மைத்திரி



கொழும்பு, பெப். 10
இலங்கை பௌத்த நாடு, மகாசங்கத்தினருடன் மோத முடியாது. பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள சக்திகள் எதிர்க்கும் விடயத்தை செய்யவும் முடியாது. எனவே, வடக்கு அரசியல் தலைவர்கள் சமஷ்டியில் தொங்கிக்கொண்டிருக்காது நடுநிலைபோக்குக்கு

»11



## '13' நிறைவேற்றப்படாவிட்டால் சிறிலங்கா பிச்சையெடுக்கும்!

### முதன்மைப் பௌத்த பீடங்களுக்கு விக்னேஸ்வரன் எம்.பி. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 10
ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என நீங்கள் கூறுகிறீர்கள். நாடு தற்போது பிச்சைப் பாத்திரத்துடன் உலகை வலம் வருகையில் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவது

»11



noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு

## மொட்டுக்குள் முரண்பாடு எதுவும் இல்லையாம்!



கொழும்பு, பெப். 10

ஒற்றையாட்சிக்குள் உச்சபட்சமாக அதிகாரத்தைப் பகிர்வது என்பது பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுடன் அவ்வளவாக முரண்படவில்லை – என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை ஆரம்பித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை பிரகடன உரையாற்றிய போது, ஒற்றையாட்சிக்குள் உச்சபட்சமாக அதிகாரத்தைப் பகிர்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக கூறினார். (ஒ-இ)

## அரசாங்க ஊழியர்களுக்கு சலுகைகளுக்கு வரியில்லை!

கொழும்பு, பெப். 10

அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடங்களில் வழங்கப்படும் சில பணமல்லா சலுகைகளுக்கு, உழைக்கும்போது செலுத்தும் புதிய வரி முறைமையில் இருந்து விலக்களிக்கும் சுற்றறிக்கையை உள்நாட்டு இறைவரி திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடங்களில் வழங்கப்படும் வாகனங்கள், எரிபொருள் கொடுப்பனவுகள், வீடுகள் மற்றும் மருத்துவப் பலன்கள் போன்ற பணமில்லாச் சலுகைகளுக்கு செலுத்த வேண்டிய வரியைச் செலுத்துவதில் இருந்தே விலக்களிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலரின் பணிப்புரையின் பேரில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் இந்த சுற்றறிக்கை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. (ஒ-இ)

## ஷாப்டர் உடலில் சயனைட் நீதிமன்றத்தில் தெரிவிப்பு


கொழும்பு, பெப்.10

கோடீஸ்வர தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உடலுக்குள் சயனைட் கலந்ததால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் அளுத்கடை பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயிரிழப்புக்குக் காரணம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட மருத்துவ சாட்சியங்கள் முரண்பாடானவை என ஷாப்டர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதியின் சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன தெரிவித்தார். ஒரே மருத்துவர் இரண்டு தடவைகள் மரணத்துக்கு இரண்டு காரணங்களைக் கூறியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆணைக்குழுவுக்கு அழைப்பு!



கொழும்பு, பெப்.10

மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாளை அழைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வுக்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான அடிப்படை செயற்பாடுகள் தொடர்பாக இங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பெப்ரவரி மாத செலவினங்களுக்காக நிதியமைச்சின் செயலாளர் விடுத்த கோரிக்கைக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக பெப்ரவரி மாதத்துக்கு 770 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் நிமால் ஜி.புஞ்சி ஹேவா குறிப்பிட்டிருந்தார்.

ஆயினும் இது தொடர்பான அறிவித்தல் தொடர்பில் நிதி அமைச்சிடம் இருந்து எவ்வித பதிலும் இதுவரை வரவில்லை என்று நிமால் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார். (எ-இ)

## எம்.பியாக பதவியேற்றார் பௌசி



கொழும்பு, பெப்.10

ஏ.எச்.எம். பௌசி நாடாளுமன்றஉறுப்பினராக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். முஜிபுர் ரஹ்மான் பதவி விலகியதை அடுத்து வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலேயே ஏ.எச்.எம்.பௌசி நியமிக்கப்பட்டுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அண்மையில் விலகினார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்கள் கிடைத்த நிலையில், ஏ.எச்.எம்.பௌசி 48 ஆயிரத்து 701 வாக்குகளைப் பெற்றார். அவர் பட்டியலில் 7ஆவது இடத்தைப் பெற்றிருந்தார். முன்னாள் கொழும்பு மேயரான ஏ.எச்.எம்.பௌசிக்கு தற்போது 85 வயது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## ‘13’ ஐ செயற்படுத்துவதற்கு அதிகாரம் கொடுத்தது யார்?

### தம்மரதன தேரர் போர்க்கொடி



கொழும்பு, பெப்.10

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி வடக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மிஹிந்தலை விகாராதிபதி வரவஹங்குனவே தம்மரதன தேரர்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய போராட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் அரச தலைவர் தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் சென்றபோது தனக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மலசலம் கலந்த சேற்றை அள்ளி வீசியபோதே ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரர்களே, நாங்கள் இனவாதிகள் அல்ல. அந்த வகையில் மலசலம் கலந்த சேற்றால் தாக்கினாலும் அவர்கள் மீது சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நாடு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்படப் போகிறது என்றால் நாடாளுமன்றத்தில் ரணிலை ஜனாதிபதி ஆக்குவதற்கு வாக்களித்தவர்கள் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். நமது தலைவர்கள் இந்நாடு

கள் ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகள் அல்ல. மூன்று மகா சங்கங்களுமே இந்நாட்டின் பௌத்த தலைமையாகும். இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்காக முன்னோக்கிச் செல்வோம் என பௌத்த பிக்குகள், இந்து குருக்கள், இஸ்லாமிய மௌலவிகள் ஆகியோரிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (எ-இ)

## நிலக்கரிக்கு நிதியில்லை

கொழும்பு, பெப்.10

நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்கு கொண்டு வரப்படும் நிலக்கரிக் கப்பல்களுக்கு பணம் செலுத்துவது கடினம் என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள கப்பலுக்கு பணம் செலுத்துவதற்கு தற்போது பணம் இல்லை என அந்த நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

இரண்டு கப்பல்களுக்கும் 30 வீதம் பணம் செலுத்தப்பட்டாலும் மீதமுள்ள தொகையை கப்பல்களில் இருந்து நிலக்கரி இறக்கும் முன் செலுத்த வேண்டும் என நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இந்தப் பணத்தை செலுத்துவதற்கான நிதி தற்போது போதுமானதாக இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.10

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வலி.மேற்கு பிரதேசசபைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளையின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச)

# நெற்பயிர் அழிவுகளுக்கு இழப்பீடு பெற்றுத் தருக!

## கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.10

கடந்த வாரம் பெய்த பெருமழையால் அழிவுற்ற பெரும்போக நெற்செய்கைக்கான இழப்பீடுகளை பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டும் என கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் கிளிநொச்சி கமக்கார அமைப்புகளின் மாவட்ட சம்மேளனத்தால் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்கள், கிளிநொச்சி கமநல காப்புறுதி பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது: கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடைக்கு தயாரான நிலையில் கொட்டித்தீர்த்த பெருமழையால் பல ஏக்கர் வயல் நிலங்களில் வெள்ளம் சூழ்ந்து நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

வெள்ளம் சூழ்ந்து காணப்படுவதால் அறுவடை செய்ய இயலாத நிலை காணப்படுவதுடன் மேலும் பல ஏக்கர் வயல் நிலங்களில் அறுவடை மேற்கொள்ளப்பட்டாலும் அறுவடை நெல் கால்நடை தீவனத்துக்கே பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே எமது வயல்நிலங்களைப் பார்வையிட்டு விவசாயிகளுக்கு இழப்பீடுகளை பெற்றுத்தர உரிய தரப்பினர் ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ச-13)



## புதுக்குடியிருப்பு பகுதியில் புலிகளின் துப்பாக்கிகள்?

*அகழ்வுப் பணியில் ஏமாற்றம்*

முல்லைத்தீவு, பெப். 10

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் தனியார் காணியொன்றில் விடுதலைப் புலிகளின் கைத்துப்பாக்கிகள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அகழ்வுப் பணி நடத்தப்பட்டது.

குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் அதிகளவான கைத்துப்பாக்கிகள் புதைக்கப்பட்டுள்ளன என இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸாரால் நீதிமன்ற அனுமதி கோரப்பட்டது.

நீதிமன்ற அனுமதியின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் குறித்த பகுதியை அகழ்வு செய்யும் பணி நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் பத்து அடி ஆழம்வரை தோண்டிய நிலையில் தண்ணீர் ஊறத் தொடங்கியுள்ளது. ஆயினும் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கைத்துப்பாக்கிகள் எவையும் கிடைக்கப்பெறாமையால் அகழ்வுப் பணி கைவிடப்பட்டது. (ச-19)

## உடைமையில் ஹெரோய்ன்: நெல்லியடியில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 10



உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்.நெல்லியடி இமையாணன் பகுதியில் நேற்றுமுன்தினம் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றது.

மானிப்பாய் மற்றும் நல்லூரைச் சேர்ந்த 24, 27 வயதான இரு இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் 63 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ச-20)



## 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

மன்னார், பெப். 10

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் நெல்லுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது.

குறித்த நபர் சந்தேகத்துக்கிடமான முறையில் சுற்றித் திரிந்தவேளை விசாரணைக்குட்படுத்திய போதே அவரிடமிருந்து 5 பொதிகளில் சுமார் 10 கிலோ எடையுள்ள கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. இதன்பெறுமதி 3 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 20 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் சட்டநடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச-213)

### கோத்தா நியமித்த

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாது அரசாங்கம்!

கொழும்பு, பெப். 10

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவால் நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அறிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்துவதை இடைநிறுத்துமாறு கோரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் ரிட் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் மேற்குறிப்பிட்ட விடயத்தை மன்றுக்கு அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது மனுவில், மனுதாரர் தொடர்பாக 1751 பக்கங்களில் உள்ள கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் செயற்பாட்டை இடைநிறுத்த இடைக்கால உத்தரவை கோரியுள்ளார்.

2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில், ஜனாதிபதி ஆணைக்குழுவில் தான் சமுகமளித்திருந்ததாகவும் பிரதிவாதியாக தான் கருதப்படவில்லை என்றும், சாட்சியாக மாத்திரம் கருதப்பட்டிருந்ததாகவும் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் மனுதாரர் பற்றிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அல்லது வழக்குடன் தொடர்புடைய பொருள்கள் உள்ளன என்றும் மனுதாரர் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின்போது, இயற்கை நீதி விதிகள் முழுமையாக மீறப்பட்டுள்ளதாகவும், தமக்கு முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை எனவும் மனுவில் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## பருப்பு, கிழங்கு விலையில் வீழ்ச்சி

கொழும்பு,பெப். 10

புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் சில பொருள்களின் விலைகளில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி ஒரு கிலோ பருப்பு 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 330 ரூபாவாகவும் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 110 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ 100 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

அதேவேளை ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 215 ரூபாவிலிருந்து 230 ரூபாவாக அதிகரித்துள்ளது என அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புப் போராட்டங்களால் ஒரு பில்லியன் ரூபா இழப்பு

கொழும்பு, பெப்.10

**பல முக்கியமான துறைகளின் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக, நாடு ஒரு பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளது என்று சிரேஷ்ட பொருளாதார நிபுணர்களை கோடிட்டு செய்தித்தாள் ஒன்று தகவல்களை வெளியிட்டுள்ளது.**

அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கைக்கு எதிராக மருத்துவர்கள் மற்றும் பல்வேறு துறையினர் நேற்றுப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனால் நாட்டுக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் ஏற்பட்ட இந்த இழப்பு இலங்கையின் அபிவிருத்திக்குப் பெரும் தாக்கமாகும் என்றும் பிரியங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான எதிர்ப்புக்கள், இலங்கையின் உலகளாவிய பங்காளிகளுக்கு தவறான சமிக்ஞையை அனுப்பியுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை மின்சாரசபை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை துறைமுக அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, பல வங்கிகள், இலங்கை விமானப் போக்குவரத்து, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட 40 க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கையை எதிர்த்து நேற்றுமுன்தினம் போராட்டங்களை முன்னெடுத்தன.

இதேவேளை, இந்தப் போராட்டங்களின் மத்தியில் புதிய உழைக்கும்போதே செலுத்தும் வரியில் சில விலக்களிப்புக்களை அரசாங்கம் அறிவித்தது. தமது மாத வருவாயில் இருந்து அரச மற்றும் தனியார் பணியாளர்களுக்கு மருத்துவக் கொடுப்பனவு, வாகனம் உட்பட்ட சில கொடுப்பனவுகளுக்கு விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# தமிழ் அரசுக் கட்சியின் பிரிவு தமிழருக்கு துரோகமிழைப்பே

## கஜதீபன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 10

தமிழ் மக்களின் அடையாளத்துக்காக குரல் கொடுக்க உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக்கட்சி பிரிந்தமை தமிழினத்துக்கு செய்த துரோகமாக கருதப்படும்-இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை தொகுதியின் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாங்கள் பதவிகளுக்காக கதிரைகளுக்கு வரவில்லை. தமிழினத்தின் இருப்பாக மட்டுமே குரல் கொடுத்து வருகின்றோம்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக நாங்கள் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை ஒவ்வொரு வீடுகளுக்கும் கொண்டு சேர்த்திருக்கின்றோம்.

ஆனால் தற்போது சுயநலத்துக்காகவும் ஆசனங்களுக்காகவும் தமிழரசுக் கட்சி பிரிந்து சென்றுள்ளது. இது தமிழினத்துக்கு செய்யும் துரோகமாகும். தமிழினம் நெருக்கடியான தீர்வின்றிய சூழலை எதிர்கொள்வதற்கு இவ்வாறான முறைகேடான நடவடிக்கைகளும் காரணமாகும்.

தற்போது கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அங்கத்துவக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலம் முதல் செயற்பட்டவர்களாவர். ஆக, தமிழரசுக்கட்சி அவர்களுக்கு வகுப்பெடுக்கக்கூடாது.

இந்த அரசு தீர்வை வழங்குவதாகக் கூறி வரும் ஏமாற்றுக் கதைகளை இந்த முறை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது- நிரந்தர தீர்வையே வலியுறுத்த வேண்டும்- என்றார். (ச-125)

# டெங்கு நோய் வீரியம் ஜனவரியில் குறைவு!

## யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் ஓரளவு குறைந்து காணப்படுகின்றது என மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 94 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மட்டும் 156 பேர் வரையில் டெங்கால் பாதிக்கப்பட்டனர்.

இந்தநிலையில் டிசெம்பர் மாதத்தை காட்டிலும் ஜனவரி மாதத்தில் அதன் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளமை அவதானிக்க முடிகிறது. ஆயினும் கடந்த வாரம் பெய்த மழையால் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களில் நுளம்புக் குடம்பிகள் பெருகுவதற்கு வாய்ப்புள்ளது. சுகாதாரப் பிரிவினர் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை தொடர்ந்து வழங்கவேண்டும். அத்துடன் குடியிருப்பாளர்களும் தமது குடியிருப்புக்களில் நுளம்பு பெருகாத வண்ணம் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

அடுத்த வாரம் முதல் சுகாதாரப் பிரிவினர் டெங்கு சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிப்பர் என மாநகர சுகாதாரப் பிரிவு மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ச-17)

# கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, பெப்.10

தென்மராட்சி பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவித்தொகை மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவுகள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பட்டியல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச சமூகசேவைகள் அலகினரால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் இந்தக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# மாளிகையில் பணம் மீட்பு; கோத்தாவிடம் விசாரணை

கொழும்பு, பெப்.10

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்சவிடம் 3 மணிநேர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் அண்மையில் பெறப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

அரச எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகையிலிருந்து போராட்டக்காரர்களால் 17.85 மில்லியன் ரூபா மீட்கப்பட்டது.

இதுதொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் ஏன் இன்னமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இந்தநிலையில் மீட்கப்பட்ட பணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கோத்தாபய ராஜபக்சவிடம் 3 மணிநேர விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை, கைப்பற்றப்பட்ட இந்தப் பணம் தனது சொந்தப் பணம் என சட்டத்தரணி ஒருவர் மூலம் கோத்தாபய உரிமை கோரியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். செலவுகள் ஏற்படக்கூடும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒரு முறைக்குப்பலமுறை யோசித்துஎடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச்செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயல்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** கலகலப்பான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒரே நாடு இரு சட்டம்

இலங்கையின் சட்டப் பிரயோகம் தமிழர்களுக்கு ஒன்றாகவும் சிங்களவர்களுக்கு அல்லது அரசுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு இன்னொன்றாகவும் இருந்து வருகின்றமை வழமையே. இந்தப் பிரிவினை– அல்லது பாகுபாடுதான் இலங்கைத் தீவையே மீண்டெழ முடியாத சேற்றுச் சகதிக்குள் மாட்டிவிட்டிருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்குப் பதில் அந்தச் சகதிக்குள்ளேயே மீண்டும் மீண்டும் கால்களை வைத்து தன்னைத்தானே புதைத்துக் கொண்டிருக்கின்றது இந்தத் தீவு.

வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய பேரணி பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரநாளை கரிநாளாகப் பிரகடனப் படுத்திய தினத்தில் ஆரம்பமானது, கடந்த 7ஆம் திகதி மட்டக்களப்பில் அது நிறைவுற்றது. யாழ். பல்கலைக் கழக வளாகத்திலிருந்து பேரணி வெளிவந்த சில நிமிடங்களிலேயே, சில நூறு மீற்றர் தூரத்தில் வைத்தே பொலிஸார் பேரணியை மறித்தனர். தேர்தல் காலத்தில் இவ்வாறான பேரணிகளை முன்னெடுப்பது சட்டவிரோதம் என்று ஒலிபெருக்கி ஊடாக அறிவித்தனர். அந்தத் தடையை முறியடித்துச் சென்றது பேரணி. மட்டக்களப்பில் பேரணி முடிவடைந்த பின்னர் பொலிஸார் தமது வேலையைக் காட்டியிருக்கின்றார்கள். பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், சிவில் செயற்பாட்டாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் உட்பட 7 பேருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால், இதே நாளில் அதாவது பெப்ரவரி 4 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அரசாங்கத்தை ஆதரித்து ஒரு சிறு குழுவினரால் நகரின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், ஆபத்தான சாரத்தியத்தை மேற்கொண்டும் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் பொலிஸார் வாய் திறக்கவில்லை. மோட்டார் சைக்கிளில் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியவாறு, தலைக்கவசம் கூட அணியாமல் ஒரு சில டசின் கணக்கானோர் நகரில் பவனிவந்தனர். மறுபுறம் முச்சக்கரவண்டிகளில் 'குறளிவித்தை' காட்டியவாறும் சிலர் வந்தனர். அந்தப் பேரணி தொடர்பான ஒளிப்படங்களை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூட தனது ருவிட்டரில் பகிர்ந்து பெருமை பாராட்டியிருந்தார். பல்கலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பேரணி தேர்தல் சட்டத்தை மீறுவதாகச் சொன்ன பொலிஸாரின் கணக்கில், அரச சார்பான குறளிவித்தைப் பேரணி தேர்தல்கால சட்டவிரோதக் கூட்டம் ஆகாதா ?


இவை எல்லாவற்றுக்கும் அப்பால் கொழும்பு மாநகரில், நேற்றுமுன்தினம் பிக்குகள் பலர் ஒன்றுகூடி 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக பேரணி நடத்தியிருக்கின்றார்கள். அத்தோடு 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதி ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தியும் இருந்தனர். நாடாளுமன்றத்தை நோக்கி நகர்ந்த அவர்களது பேரணியை பொலிஸார் எவ்வளவு பவ்வியமாக கையாண்டார்கள் என்பது அதன் காணொலியைப் பார்வையிட்ட எல்லோருக்கும் தெரியும். இதனைவிட, பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தலைநகர் கொழும்பிலும், நாடு முழுவதும் நேற்றுப் போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தியிருந்தார்கள். இவையெல்லாம் வர்த்தமானியில் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியான பின்னர் இடம்பெற்ற சம்பவங்களே. இந்தச் சம்பவங்களின் போதெல்லாம் பொலிஸார் கைகட்டி வேடிக்கை மட்டுமே பார்த்திருந்தனர். இந்தக் கூட்டங்கள் எவையும் சட்டவிரோதம் என்றுகூடச் சொல்லவில்லை. ஆனால், வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி மாத்திரமே சட்டவிரோதக் கூட்டமாக பொலிஸாரின் கண்ணுக்குத் தெரிந்திருக்கின்றது.

பொலிஸாரின் இந்தப் பாகுபாடான – பாரபட்சமான செயற்பாடு ஒருபோதும் நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல. ஆளுக்கு ஆள் சட்டத்தை வேறுபடுத்திப் பிரயோகிப்பதன் ஊடாக நாட்டின் பிளவை மேலும் வலுக்கச் செய்ய பொலிஸார் ஊக்குவிக்கின்றனரா? என்றே கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. நீதி நிலை நாட்டப் படுகின்றதோ? இல்லையோ? நீதி நிலைநாட்டப்படுவது போலாவது காண்பிக்கப்பட வேண்டும் என்பதை இலங்கைப் பொலிஸாருக்கு உறைக்க – உரத்து எவரேனும் சொல்லிவிடுங்கள்.

## நாளொரு நல்வார்த்தை

"தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிட பெரிய அவமானம் எதுவுமில்லை"

– மகாத்மா காந்தியடிகள்




# பிக்குகள் போராடுவதை ரணில் எதிர்பார்த்தார்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டுகிறது



கொழும்பு, பெப். 10

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகாசங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இதனையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்தார். இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து அதனுடாக தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறார். நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ளவேண்டும் – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச செலவுகளை கட்டுப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு பல சுற்றறிக்கையை வெளியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் நிதி மற்றும் காலத்தை வீணடிக்கும் வகையில் செயற்படுகிறார். கடந்த ஆறு மாத காலத்துக்குள் நாடாளுமன்ற கூட்டத்தொடர் இரு முறை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் கொள்கை உரையாற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் கொள்கைகளை செயற்படுத்துவதில்லை.

கொள்கைத் திட்டத்தில் கலந்து கொள்வதால் எவ்வித பயனும் ஏற்படாது என்பதால் அக்கிராசன உரையைப் புறக்கணித்தோம். கொள்கைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது - என்றார்.

(ஒ-இ)

# பொலிஸ் வேடமிட்டுச் சென்ற 4 பேர் கைது

கொழும்பு. பெப். 10

நிட்டம்புவ, மாஇம்புல பிரதேசத்தில் பொலிஸார் போன்று மாறுவேடமிட்டுச் சென்ற நால்வரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் சந்தேகத்துக்கிடமான காரை மறித்து சோதனையிட்டனர். காருக்குள் பொலிஸ் சீருடை அணிந்த 4 பேர் இருந்துள்ளனர். அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லர் என்பது கண்டறியப்பட்ட நிலையில் 4 பேரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து 2 கைவிலங்குகள் மற்றும் 3 போலி இலக்கத்தகடுகள் ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டனர்.

சந்தேகநபர்கள் ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடுபட பயணித்தார்களா? என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-இ)

**நாளை** 11.02.2023 சனிக்கிழமை தை 28

சுபநேரம் : 03.34 - 05.04

ராகுகாலம் : 09.34 - 11.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கம்பன் விழா கோலாகல ஆரம்பம்

**யாழ்ப்பாணம், பெப். 10**
**அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்.கம்பன் விழா இன்று 10ஆம் திகதி முதல் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.**

முதல் நாள் நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் இரா.மாது தலைமையில் 'திருநாள் மங்கலம்' மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இரண்டாம் நாளான நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருக்கேதீச்சரம் தருமை ஆதீனக் கிளைமடத் தலைவர் ஸ்ரீமத் மௌனமீனாட்சி சுதந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் 'கம்ப சித்தாந்தம்' எனும் தொனிப்பொருளில் சிந்தனை அரங்கு நிகழ்த்தப்படவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராக 'வள்ளுவர் காட்டும் அமைச்சனாய் கம்பனில் பெரிதும் முதன்மையுறுபவர்' எனும் தலைப்பில் பட்டிமண்டபம் இடம்பெறவுள்ளது. மூன்றாம் நாள் நிகழ்வுகளாக காலை 9.30 மணிக்கு விவாத அரங்கும், மாலை 4.30 மணிக்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி ஆறு.திருமுருகன் நடுவர் ஆயம் வகிக்கும் 'வழக்காடு மன்றம்' சிறப்புறவுள்ளன. அனைவரையும் கம்பன் விழாவில் கலந்து 'தமிழ்ச் சுவை பருக' வருகை தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மாணவரை இணைக்கும் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6 மாணவர்களை 2023 ஆம் ஆண்டுக்கு இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 120 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணம் 150 ரூபாவை செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதற்கமைய விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படும்.
எனவே விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். அத்துடன் காலதாமதமாகி கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-14)

## சின்ன வெங்காயம் விலையில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், பெப். 10
வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ வெங்காயம் 800 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.
அறுவடை செய்யப்பட்ட புதிய வெங்காயம் தற்போது சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
இந்தநிலையில் சின்னவெங்காயத்தின் விலை அரைவாசியாக குறைவடைந்து 400 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. அடுத்த வாரமளவில் மேலும் விலையில் வீழ்ச்சி ஏற்படலாம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.
இதேவேளை கடந்த சில நாள்களாக கொட்டித்தீர்த்த கனமழையால் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட வெங்காயப் பாத்திகள் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)



## ஓரிடத்திலே சேவை பெற பொது அலுவலகக் கட்டடம்

*சாந்தபுரத்தில் திறப்பு*

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் பொதுநோக்கு மண்டபம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
சகல சேவைகளையும் ஓரிடத்தில் இலகுவாக மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த பொதுநோக்கு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.
இந்தக் கட்டட அலுவலகத்தில் கிராமஅலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்பநல அலுவலர் ஆகியோர் இணைந்து மக்களுக்கு பணியாற்றவுள்ளனர்.
நிகழ்வில் கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் ஸ்ரீமோகன் மற்றும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்பாடு திட்ட பிரதானி கார்த்திகேயன், நிகழ்ச்சித் திட்ட அதிகாரி அவந்தி ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர். (ச-113)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் திறன்வகுப்பறை கையளித்தலும்

சாவகச்சேரி பெப் .10
வரணி வடக்கு அ.த.க.பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் பாடசாலை திறன் வகுப்பறை கையளித்தல் நிகழ்வும் அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ய-9)



ஓம் ஆன்மிக நிறுவனத்தின் ஏற்பாட்டில் தைப்பூச விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பின்பக்கமாக அமைந்துள்ள நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதரக இந்தியா கோணரில் பயிலும் யோகா மாணவர்களின் யோக அசைவுகள் இரு நிகழ்வுகளாக அரங்கேற்றப்பட்டன. வண்ணைக் கலைமன்ற மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. (ய-66)



## நடுவீதியில் கொட்டப்பட்ட கண்ணாடித்துகள் கழிவு

***பயணிகள் அசௌகரியம்***

யாழ்ப்பாணம், பெப்.10
யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்குப் பகுதியில் போத்தல் கண்ணாடிக் கழிவுகளை நடுவீதியில் வீசிச் சென்றதால் வீதியால் பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
வீட்டுக் கழிவுகள், மற்றும் கண்ணாடிப் போத்தல் துகள்கள் ஆகியவை இனந்தெரியாதோரால் நடுவீதியில் கொட்டப்பட்டுள்ளன. இதனால் வீதியூடாகப் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது.
இந்த அநாகரிக செயற்பாட்டில் ஈடுபடுவோரை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ச-66)



யாழ்.மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் தலைவராக மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன் பொறுப்பேற்றுள்ளார். கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக செயலர், யாழ்ப்பாண சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளருமான மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-66)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.10
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடாத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.
சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் க.கைலநாதன் "அன்பே சிவம்" என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## வலி வடக்கின் சாதனைப் பெண் விருது - 2023

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் பால்நிலை சமத்துவம், பெண்ணுரிமை மற்றும் பெண்களின் பங்களிப்பை ஊக்கப் படுத்தும் முகமாக சபை எல்லைக்குள் வதியும் 18 வயதிற்கு மேற்பட்ட கலை இலக்கியம், சமூக சேவை, விளையாட்டுத்துறை, கல்வியியலாளர், சுயதொழில் முயற்சியாளர், ஊடகவியலாளர் மற்றும் புத்தாக்குனர் ஆகிய விடயப்பரப்பினுள் ஆர்வமும் தகுதியுமுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 2023.02.13 ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தில் பெற்று பூரணப்படுத்தி உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 2023.02.23 ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தொடர்புகளுக்கு : 021 224 1130

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**2023.02.10**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகரசபை
## திரவக்கழிவகற்றல் சேவை

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இடங்களில் திரவக்கழிவகற்றல் வாகனத்தினை வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒரு வருட காலத்திற்கு தகுதி வாய்ந்த சேவை வழங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 10.02.2023 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 15.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி உள்ளடங் கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 24.02.2023 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்.


கேள்வி திறத்தல் 24.02.2023 ஆம் திகதி பி.ப. 15.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்குரியதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு, யாழ் மாநகரசபை,**

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 . 04 . 1953



மறைவு
10 . 02 . 2006

## திரு. லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் .....,
எம்மை சீரும் ,சிறப்புடன் வாழ வழி வகுத்து ....,
இனிய வாழ்வை எமக்கு அளித்த...
என் அன்புத் தெய்வத்தை இழந்து..
17 ஆண்டுகள் ஆனாலும்....,
நித்தம் உங்கள் நினைவுகளோடு...
நின் பாத மலர் பணிகின்றோம் தந்தையே...
உங்கள் ஆன்மா அருள் பெறட்டும்,
ஆண்டவன் அடியிலே......

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள், சகோதரிகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
31 . 12 . 1959



உதிர்வு
11 . 01 . 2023

தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் செல்லையா பரமேஸ்வரி (கமலா)

நெஞ்சுருக்கும் செய்தி ஒன்று
நொடிப் பொழுதில் நாம் அறிந்தோம்
தாங்கமுடியவில்லையே தாங்கமுடியவில்லையே!
அன்பின் திருவுருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய அம்மாவே
31 நாள்கள் என்ன 31 ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது
அழகுத் திருவுருவமும் அன்பான வார்த்தையும்
எண்ணி அடங்கவில்லையே எண்ணி அடங்கவில்லையே!
எம் விழிநீர் தாங்காத வேதனையில் தாழாமல் தவிக்கின்றேன்

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**மகள்**

(cr.39220) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 11 . 1938



மறைவு
09 . 02 . 2023

### இராஜேஸ்வரி துரைசிங்கம் (மலர்)

பருத்தித்துறை முதலாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் 132, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி துரைசிங்கம் நேற்று (09.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கண்மணி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சரஸ்வதி, மயில்வாகனம் மற்றும் கமலநாயகி, ஜெகநாதன் ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், சந்திரபாலன், ஸ்ரீநந்தினி, றூபினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாரதா, ஸ்ரீகாந்தா, வரதராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷாமினி, பிரபாகரன், அபிநயா, திவ்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மிர்த்திகா, மிதுநிகா ஆகியோரின் பூட்டியும், E.S.பியதாசா, கமலா தேவி, அமிர்தசெல்வி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**132, பிறவுண் வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**
**0769763 357, 021 222 0153**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 39225) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**அமரர் இராமன் யோகராசா (G.S & J.P)**

**அமரர் துரைராஜசிங்கம் துரேந்திரா (H.N.B. ஊழியர்)**

நாட்கள் மாதங்களாயும்
மாதங்கள் வருடங்களாயும்
வருடங்கள் காலங்களாகியும்
காலாவதியாகாதது நமது அன்பானவர்களின்
நினைவுகள் மட்டுமே!

- நிஜேந்திரா -

(CS/49018)4,6

# இலங்கை வங்கி விலைமனுக் கோரல்

## இலங்கை வங்கியின் வடமாகாணத்திற்கு ஐந்து ஊழியர் நலன்புரி வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்

வாடகை அடிப்படையில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு ஊழியர் நலன்புரி வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**இவ் விலைமனுக்கோரலில் பங்கெடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- விண்ணப்பதாரரினால் முன்மொழியப்படும் வாகனம் பயணிகள் போக்குவரத்து வாகனமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் உயர் கூரை வாகனமாகவும், 14 பயணிகள் வசதியாகப் பயணிக்கக் கூடிய வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனமானது இரட்டைக் குளிரூட்டி வசதியைக் கொண்டிருக்க வேண்டும்.
- வாகனமானது 2012 அல்லது அதற்குப் பிந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் காணப்படுதல் வேண்டும்.
- வாகனமானது பயணிகளுடன் பூரணமாகக் காப்புறுதி செய்யப்பட்டதாகக் காணப்படுதல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வாகனத்தின் உரிமையாளராக இருப்பதுடன் வாகன பதிவு சான்றிதழின் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
- வாகனத்தின் பராமரிப்புச் செலவு, ஓட்டுனரின் சம்பளம், காப்புறுதி மற்றும் எரிபொருள் கட்டணமானது வாகனத்தின் உரிமையாளரால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.
- வங்கியின் தேவைக்கேற்ப வாகனம் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும், வாகனச்சாரதி அனுபவமுடையவராகவும் ஒழுக்கமுடையவராகவும் காணப்படுதல் வேண்டும்.
- தெரிவுசெய்யப்படும் வாகனமானது ஒப்பந்த காலப்பகுதியில் உரிமை மாற்றம் செய்யப்படுதல் ஆகாது. அவ்வாறு உரிமைமாற்றம் செய்யப்படுமிடத்து வங்கியுடனான ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
- விண்ணப்பதாரி இலங்கை வங்கி ஊழியர் / ஊழியர் ஒருவரின் நெருங்கிய உறவினராக இருத்தல் ஆகாது.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா **50,000/-** வைப்புச்செய்தல் வேண்டும். ஒப்பந்த முடிவில் இது மீளளிக்கப்படும்.

உரிய விண்ணப்பமானது செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண காரியாலயத்தில் மீளளிக்க முடியாத விலைமனுக் கட்டணம் ரூபா.1,500/- + Taxes வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளமுடியும். 24.02.2023 அன்று காலை 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு உங்களது விலைமனுக்களை வடமாகாண காரியாலயத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஊழியர் நலன்புரி வாகனத்திற்கான விலைமனுக் கோரல், ………………… மாவட்டம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு செயற்பாட்டு முகாமையாளர், தொலைபேசி இல. **021 222 4683** ஊடாக வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**செயற்பாட்டு முகாமையாளர்**
**(வடமாகாணம்)**
**இலங்கை வங்கி**
**வடமாகாண காரியாலயம்**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

# SOS CHILDREN'S VILLAGES SRI LANKA — எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சேவையினை 138 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 41 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

**1. FSP இணைப்பாளர் (Coordinator - Family Strengthening Programme) (40 வயதிற்கு உட்பட்டோர்)**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிக்கான சான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில்சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

**2. Sponsorship Coordinating Assistant - (பெண் 35 வயதிற்கு உட்பட்டோர்)**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் Secretarial Practice கற்கை நெறியில் Diploma/ Certificate சான்றிதழ் அல்லது அதற்கு சமமான தகைமையை கொண்டிருப்பதோடு குறைந்தது 1-2 வருட தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- ஆங்கில மொழியறிவு கொண்டிருப்பது அவசியம்.
- கணினியறிவு (Graphic Designing, Excel, Word, E-mail & Internet) கொண்டிருத்தல் அவசியமானதுடன் நல்லூருக்கு அருகாமையில் வசிப்பது விரும்பத்தக்கது

**3. சிற்றூழியர் - Labour (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்)**

- க.பொ.த சா/தரத்துடன் தேக ஆரோக்கியமும் கொண்டவராக இருப்பதுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தினை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

**4. சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் (Care Taker) - பெண் (ஓய்வூதியத்துடனான பணி)**

- குடும்ப பொறுப்புகளற்ற பிள்ளைகளுடன் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய 26 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**5. Project Officer - 1 YEAR FIXED TERM CONTRACT**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செயற்றிட்ட முகாமைத்துவம் (Project Management), சமூகவியலில் பட்டம் (Degree) அல்லது (Diploma) சான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஆறு மாத தொழில்சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- ஆங்கில மொழியில், தமிழ் அல்லது சிங்களத்தில் சரளமாக தொடர்பு கொள்ளும்திறன் கொண்டிருப்பது அவசியம்.
- கணினியறிவு (MS office, E –Mail and E -Conferencing tools (MS Teams / Zoom etc.,) கொண்டிருத்தல் அவசியம்.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 20.02.2023 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் மூலம் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
**இல:219, நாயன்மார்கட்டு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021-221-1101 / 077-373-3711**
**மின்னஞ்சல்:** jaffna@soscvsrilanka.org

(CS/49032)4,6

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி....



## அமரர் பரமேஸ்வரி விநாயகமூர்த்தி

தோற்றம்
08.04.1950

திதி:- அபரபக்க பஞ்சமி

மறைவு
23.01.2022

தாயுமாகி தந்தையுமான எம் ஆருயிர் தெய்வமே!
ஆண்டவனிடம் நீங்கள் சென்று
ஆண்டொன்று ஆனாலும்
ஞாலம் உள்ளவரை
உங்கள் நினைவில் வாழ்வோம்

நாவற்குழி, கைதடி.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்தியாவசிய

# செலவினங்களுக்கே நிதியை ஒதுக்கவும்

## திறைசேரிக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, பெப். 10

அரச வருமான நிலைமை மேம்படும் வரை அரசசேவையைப் பேணுவதற்கு அத்தியாவசிய அரசசெலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாத்திரம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திறைசேரி செயலருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.


முன்னர் மேற்கொள்ளப்பட்டது போன்று அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு, மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் தடையாக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவைக்கு இது குறித்து அறிவித்த ஜனாதிபதி, சம்பளம் வழங்குதல், கடன் சேவைகள், ஓய்வூதியம், மருத்துவ சேவைகள், மாதாந்த சமுர்த்தி மானியங்கள், முதியோர்களுக்கான நிதியுதவி, ஊனமுற்ற குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதியுதவி, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்குதல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நிதி உதவி என்பவற்றுக்கு மாத்திரமே நிதியை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், தரம் 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு, மஹாபொல உதவித் தொகை, திரிபோஷா வேலைத்திட்டம், உழவர் ஓய்வூதியம், பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டம், இராணுவம் மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினருக்கான கொடுப்பனவு, இராணுவத்தினரின் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு, ஒத்திவைக்க முடியாத மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய தொலைத்தொடர்பு சேவைகள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், இராணுவத்தினருக்கு உணவு வழங்கல், பராமரிப்பு சேவைகள், கட்டட வாடகை, துப்புரவு சேவைகள், பாதுகாப்பு சேவைகளுக்கான ஒப்பந்தக் கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதி போன்ற சட்டப்பூர்வ கொடுப்பனவுகள் மற்றும் உர மானியம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (ஒ-இ)

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 31 • 05 • 1945



மறைவு 11 • 01 • 2023

கடந்த (11.01.2023) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இரத்தினம் பரராஜசிங்கம் (சிங்கம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.02.2023 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.02.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி கோவில் றோட்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்
076 082 8019

# ரணிலின் சித்துவிளையாட்டில் சிக்கிக்கொள்ளத் தயாரில்லை!

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, பெப்.10

அரசமைப்பின் '13' ஆவது திருத்தச் சட்டம் பிரச்சினைக்கான தீர்வு அல்ல. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கக்கூடிய புதியதொரு அரசமைப்பே நாட்டுக்குத்தேவை. எமது ஆட்சியில் அதை உருவாக்குவோம். ரணிலின் '13' விளையாட்டில் சிக்குவதற்கு நாம் தயாரில்லை.



-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமக்கான உரிமைகள் மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பன தமிழர்களுக்கு முக்கியமான விடயங்களாக உள்ளன. இவை அவர்களுக்கு வலியை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகளாக உள்ளன. ஆனால் மக்களின் இந்த வலியை விளையாட்டு பொருளாகவே ரணில் உணர்வார். ஓர் உதைபந்தாட்டம் போலவே கருதுவார்.

அரசியல் களத்திலே தனது அரசியல் விளையாட்டை முன்னெடுப்பதற்காக அந்தப் பந்தை அவர் தற்போது பயன்படுத்துகின்றார். ரணிலின் இந்த களத்தில் நாம் இறங்க வேண்டுமா? 'கோல் கீப்பராக' செயற்பட வேண்டுமா? அதற்கு நாம் தயாரில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, மொட்டுக் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் ஒன்றாக அரசில் உள்ளனர். இவர்கள் ஒன்றாக கையொப்பமிட்டு 13 தொடர்பான உறுதிமொழியை வழங்கட்டும். அவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். தற்போது என்ன நடக்கின்றது? வழங்குவேன் என்கிறார் ரணில். மஹிந்த அணி வேண்டாம் என்கிறது. தினேஷ் குணவர்த்தனவின் பிக்குகள் வீதியில் இறங்குகின்றனர். இப்படியான சண்டையை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதில் நாம் ஈடுபட வேண்டுமா?

எமது நிலைப்பாடு என்ன? மாகாணசபை முறைமையோ, 13 பிரச்சினைகளுக்கு தீர்வு அல்ல. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய புதியதொரு அரசமைப்பு, மக்கள் கருத்துக் கணிப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே - என்றார். (எ-44)

# மக்கள் சேவைக்காக எதையும் துறப்பேன்!

## பஸில் ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, பெப்.10

அரசியலில் ஈடுபடுவதற்கு இரட்டைப் பிரஜா உரிமை தடையாக இருக்குமானால் அமெரிக்க இரட்டைக் குடியுரிமையை இரத்துச் செய்யத் தயார் என்று முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்குச் சேவை செய்வதற்காக எதையும் துறப்பதற்குத் தயார். ரணில் விக்கிரமசிங்க எரிபொருள், எரிவாயு வரிசைகளையும், பத்து மணித்தியால மின் தடையையும் இல்லாது செய்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக மக்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பார். அதற்குரிய வல்லமை அவருக்கு உண்டு என்று நம்புகின்றோம் - என்றார். (எ-6)

# டயனாவைக் கைது செய்ய பிடியாணை அவசியமில்லை

## நீதிமன்றம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.10

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குடிவரவு சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்திருந்தால், அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த பிடியாணை தேவையில்லை என கொழும்பு பிரதம நீதிவான் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, இரண்டு பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பித்து இலங்கை கடவுச்சீட்டைப் பெற்றுள்ளார் என்பதற்கு போதிய சாட்சியங்கள் நீதிமன்றில் உள்ளன என்று பிரதம நீதிவான் பிரசன்ன அல்விஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்னோல்ட்டின் பெயர் கல்வெட்டில் உள்ளடக்கம்

யாழ்ப்பாணத்தில் நாளை கையளிக்கப்படவுள்ள 'யாழ்ப்பாண கலாசார நிலைய' கல்வெட்டில் யாழ். மாநகரசபை மேயர் இ. ஆர்னோல்ட்டின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளதுடன் அழைப்பிதழிலும் அவரின் பெயர் உள்வாங்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் மாநகரசபை ஊடாக யாழ்ப்பாண மக்களுக்கு கையளிப்பதற்காக இந்திய அரசின் நிதி உதவியில் 'யாழ்ப்பாண கலாசார நிலையம்' கட்டப்பட்டது. இந்திய அரசின் உதவி என்பதால் நேரடியாக மாநகரசபைக்கு வழங்கமுடியாது என்ற நிலைமையில், இலங்கை அரசின் ஊடாக அது முன்னெடுக்கப்பட்டது.

கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் அதனை நிர்வகிப்பதற்கான தகுதி மாநகரசபைக்கு இல்லையென்று தெரிவித்து கையகப்படுத்தும் முயற்சியை கொழும்பு அரசு முன்னெடுத்துவருகின்றது. இதன் ஓர் அங்கமாக நாளை இடம்பெறவுள்ள கையளிப்பு நிகழ்வுக்கான அழைப்பிதழில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கலாசார அமைச்சர் விதுர ஆகியோரின் பெயர்கள் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் யாழ். மாநகரசபை ஆட்சேபணை எழுப்பியதையடுத்து மாநகரசபை மேயரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நாளை திறந்து வைக்கப்படவுள்ள கட்டடத்துக்கான நினைவுக் கல்லிலும் மேயர் ஆர்னோல்டின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## வாழைப்பழ விலை சடுதியாக உயர்வு!

யாழ். குடாநாட்டு சந்தைகளில் வாழைப்பழங்களின் விலை திடீரென அதிகரித்துள்ளன என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இருநாள்கள் பெய்த மழை மற்றும் பலத்த காற்றால் வாழைகள் பெருமளவில் அழிவடைந்தமையே இந்த விலையுயர்வுக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனால் சந்தைகளுக்கு வாழைப்பழக் குலைகளின் வருகை குறைவடைந்துள்ளதுடன் வாழைப்பழத்துக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

சந்தைகளில் தற்போது கதலி வாழைப்பழம்கிலோ120ரூபாவாகவும் இதரைகிலோ150ரூபாவாகவும் கப்பல்வாழைப்பழம்கிலோ 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)


### வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் தேவையாக உள்ளது. அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை : 25-45

தொடர்புகளுக்கு: 077 777 5068


*அரசாங்க....*

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொண்டமைக்காக அரசாங்கஅச்சகத்திணைக்களத்துக்கு 45 மில்லியன் ரூபா தேர்தல்கள் திணைக்களம் வழங்கவேண்டியிருந்தது. நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்காமல் தேர்தல்கள் திணைக்களத்தின் அச்சிடும் பணிகளை மேற்கொள்ளமாட்டோம் என்று அரச அச்சக திணைக்களம் அறிவித்திருந்தது.

தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிட்டு இன்று அல்லது நாளைய தினத்துக்குள் தேர்தல்கள் திணைக்களத்துக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. இந்தப் பணிகள் தாமதமடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திறைசேரியால் 40 மில்லியன் ரூபா அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தபால்மூலவாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் முதல் கட்டமாக அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-5)

*மருத்துவர்...*

பட்டன. இதன் போதே மருத்துவர் சிவரூபன் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதன்படி அவர், தலா 25 லட்சம் பெறுமதியான இரண்டு இரத்தவழி உறவினர்கள் மற்றும் தலா 5 லட்சம் பெறுமதியானமூவர் என ஐந்து சரீரப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார். பளையிலுள்ளமருத்துவமனையின் விடுதியில் வைத்து மருத்துவர் சிவரூபனை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர். அவரிடமிருந்து துப்பாக்கி யொன்று மீட்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர்தெரிவித்திருந்தனர். (ம-125)


### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V). வயது-37. MBBS, Medical Doctor in UK (United Kingdom), சதயம் நட்சத்திரம். மணமகள் 88-93 வரை பிறந்த UK அல்லது Sri Lanka படித்த மணமகள் தேவை.

**Contact Number: 0044 796 094 8245**

**Whatsapp / Viber / Directly - UK Number.**



### நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMANCY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(CR 39207)(3/6)


### கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆங்கில பாட ஆசிரியை திருமதி துஷிதா பகீரதன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் சுப்பிரமணியம் தில்லைநாதன்**

அவர்கள் கடந்த (10.01.2023) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலய சமூகம்

(CS 23416) 5/6

### கொய்யாத்தோட்ட ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய கருங்கல் மூலஸ்தான கட்டுமான வேலைக்கான கூறுவிலை கோரல்

கொய்யாத்தோட்ட ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய மூலஸ்தான கட்டுமான வேலைக்கான கூறுவிலை கோரல் ஆலய பரிபாலன சபையினரால் கோரப்படுகின்றது.

பின்வரும் தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து கூறுவிலைப் படிவக் கட்டணம் ரூபா 2500.00 (மீளளிக்க முடியாதது) செலுத்தி கூறுவிலைப் படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 19.02.2023 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக் கூடியதாக சீலிடப்பட்ட பதிவஞ்சல் மூலம் செயளாளர் ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவர்கள் அதற்கென ஆலய பரிபாலன சபையினால் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இட முடியும்

I. கூறுவிலைப் படிவத்தினை 09.02.2023 ஆம் திகதியிலிருந்து 19.02.2023 ஆம் திகதி வரை ஆலய நிர்வாகப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்

II. கிடைக்கப்பெற்ற கூறுவிலைப் படிவங்களை 19.02.2023 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் ஆலய நிர்வாகப் பணிமனையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

III. பரிசீலிக்கப்பட்ட படிவங்கள் 26.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் சரிபார்க்கப்பட்டு பொருத்தமான ஒப்பந்தக்காரர் தெரிவுசெய்யப்படுவர்

IV. ஆலய பரிபாலன சபையினரால் தீர்மானிக்கும் ஒரு தொகை பணத்தினை பிணைப்பணமாக ஆலய வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு (மீளளிக்கக்கூடியது) வங்கிப்பண வைப்புசீட்டை ஒப்படைக்க வேண்டும்.


குறிப்பு- I. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரராக இருத்தல் வேண்டும்
II. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும் (இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்)

செயலாளர்,
ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய,
பரிபாலன சபை,
கொய்யாத்தோட்டம்.

**ஆலய தொடர்புக்கு-**
**0212051020 / 0776589391 /0776544500**

### மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 04 . 1940



இறப்பு 08 . 02 . 2023

**வேலுப்பிள்ளை இராமர்**

**(ஓய்வு பெற்ற அதிபர்)**

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 187, உதயநகர் மேற்கு, உதயநகர் கிளிநொச்சியினை வதிவிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை இராமர் அவர்கள் கடந்த (08.02.2023) அன்று இறைபாதம் அடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மோகனராஸ் (நோர்வே), சுதர்சினி (சுவிஸ்), கீதா(ஆசிரியை - கிளி/அன்னை சாரதாதேவி வித்தியாலயம்), அபிராமி (யாழ்ப்பாணம்), தாரணி (ஆசிரியை - கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயம்), சிறீகஜன் (வைத்தியர் - சித்த போதனா வைத்தியசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (நோர்வே), விமலநாதன் (சுவிஸ்), சிறீசந்திரநிவாஸ், அமரான துரேஸ்குமார், அகிலன் (கிளி / பிராந்திய சுகாதார பணிமனை - அபிவிருத்தி உத்தியோகத்தர்), ராஜினி (வைத்தியர் - பட்ட மேற்படிப்பு இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைதேகி, ஆதிரை (நோர்வே), பிரியங்கன், ஆர்த்திகா, அபினா (சுவிஸ்), பிரணவி (கிளிநொச்சி), தேனினியன், தேனமுதன் (யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி), தாருகன், கிருத்திகா, தணிகா (கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்), கொலுசனன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆத்மிகா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), அவினீசன் (யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலம்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2023) காலை 9 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொலைபேசி : 076 111 9249

(CR 39225) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித்...

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த உத்தரவிடக்கோரிய மனுவும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு வருகின்றது.

தேர்தலை சில மாதங்களுக்கு - ஆகக் கூடியது 3 மாதங்களுக்கு ஒத்திவைக்கும் நிலைப்பாட்டுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் இணங்கிச்செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் நிலைப்பாடு எடுக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

இதேவேளை- இன்றைய தினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிறிதொரு திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டால் தேர்தலை ஒத்திவைப்பது கடினம் என்றும் கொழும்பு வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. ஆயினும் பெரும்பாலும் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம் என்று கூறப்படுகின்றது. (அ-ஓ-5)

## யாழ். மாவட்ட...

களுடன் இன்று கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இன்று மாலை 4 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-5)

## சுதந்திரநாள்...

விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தனது கொள்கை விளக்கவுரை முடிந்த பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சாள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோருடன் கலந்துரையாடினார். இதன்போது, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சுதந்திரநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அத்துடன் தனது யாழ்ப்பாணப் பயணத்தின்போது புத்திஜீவிகள் குழுவுடனும் சந்திப்பு நடத்தவுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (அ-ஓ-5)

## சுதந்திரதின...

ஜனாதிபதிக்கும் நேரடியாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையின் 75ஆவது சுதந்திரநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நாளை மாலை இடம்பெறவுள்ளன. இதில் கலந்துகொள்ளுமாறு வடக்கைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி என்பனவற்றின் நிலைப்பாடு நேற்றுவரை தெரியவரவில்லை. (அ-ஓ-5)

## மகாசங்கத்தினர்...

இறங்கிவரவேண்டும் - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனக்கு முன்னர் உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சமஷ்டி வேண்டும் எனக் கூறினார். அவரின் இந்த அறிவிப்பு சிங்கள மக்களையும், பௌத்த தேரர்களையும் கொதிப்படைய வைக்கக்கூடியது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அப்போதைய சூழ்நிலைக்கு மத்தியில் ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்திருந்தாலும் அதன் பின்னர் அவரோ அல்லது நான் உட்பட ஜனாதிபதி பதவிகளை வகித்தவர்களோ அதில் கைவைக்கவில்லை. ஏனெனில் சிங்கள, பௌத்த மக்களை பகைத்துக்கொண்டு செய்ய முடியாது என்பது தெரியும். எனினும், தற்போதைய ஜனாதிபதி ஏன் கைவைத்துள்ளார் என்பது தெரியவில்லை.

இந்நாட்டில் பிக்குகள் எதிர்க்கும் விடயத்தை ஒருபோதும் செய்யமுடியாது. அதனால்தான் செல்வநாயகம் - பண்டாரநாயக்க உடன்படிக்கைகூட கொளுத்தப்பட்டது, மகாசங்கத்தினருடன் மோத முடியாது. இது பௌத்த நாடு. சிங்கள சக்திகளையும், பௌத்த பிக்குகளையும் பகைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது வடக்கில் 95 சதவீதக் காணிகளை விடுவித்தேன். மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையே சிறந்தது. வடக்கு அரசியல் தலைவர்கள் முழு இறைச்சியும் வேண்டுமென நிற்காமல், நடுநிலை போக்குக்கு வரவேண்டும் - என்றார். (அ-ஓ-44)


## யாழ்ப்பாணத்தில்...

களாக நடைபெறவுள்ளது. இவற்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

காலை 9 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மையம் கையளிப்பு வைபவம் நடைபெறும். இந்த நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகனும் கலந்துகொள்ளவுள்ளார். அவருடன் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையும் பங்கேற்கவுள்ளார்.

இதன்பின்னர் மாலை 5 மணிக்கு இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் கலாசாரமையத்தில் நடைபெறும். இதன்போது வடக்கின் 5 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுதந்திரநாள் ஊர்தி பவனி நடைபெறும். இறுதியாக இரவு 7 மணிக்கு முற்றவெளியில் இசை நிகழ்வு நடைபெறும். இந்த இரு நிகழ்வுகளும் ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ-ஓ-5)

## பண்ணைக்கடலில்...



மீட்கப்பட்டது. சடலம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டு போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் நேற்று மாலைவரை அடையாளம் காணப்படவில்லை. (அ-ம-26)

## ஹெரோய்னை...

பட்டவர்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கூலித்தொழில் புரிபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## பலாலியில்...

இந்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப்பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் அண்ணாமலை தலைமையிலான குழுவினரே பலாலி சர்வதேச விமான நிலையத்தினூடாக வந்தடைந்தனர். அவர்களை யாழ். இந்தியத் துணைத் தூதுவர், சிவசேனை அமைப்பின் தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையிலான அதிகாரிகள் வரவேற்றனர். இந்தக் குழுவினர், இந்தியாவின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்டுவரும் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு இன்று செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## '13'...

ஒரு ஆரோக்கியமான நடவடிக்கையே. அல்லாதுவிடின் இலங்கை தொடர்ந்து யாசகமெடுக்கும் என்று நாட்டின் முதன்மைப் பௌத்த பீடங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வணக்கத்துக்குரியவர்களே அண்மையில் நீங்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்திய விடயங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தால், தொல்பொருள் அடையாளங்கள் மாற்றப்படுவதற்கும், பிரிவினைக்கும் வழிவகுக்கும். முன்னாள் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அது நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் என்பதாலேயே நடைமுறைப்படுத்தவில்லை. நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பது ஜனாதிபதியின் கடமை. பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் அது மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் என தெரிவித்திருந்தீர்கள். நாடு தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் வல்லரசுகள் இலங்கை மீது விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி இணங்கக்கூடாது எனவும் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தனது அதிகாரத்தைப் பாவிக்கக்கூடாது எனவும் தெரிவித்திருந்தீர்கள்.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் பிரிவினை கோரவில்லை. மத்திய அரசாங்கத்தின் ஆட்சியில் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு திருப்தியில்லை. அத்துடன் சிங்களவர்கள் வடக்கு-கிழக்கு தமிழர்களை தமது கால்களின் கீழ் வைத்து ஆட்சி செய்வதாகவே அவர்கள் உணர்கின்றனர். இதனால்தான் அவர்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமென நினைக்கிறார்கள் என மகாநாயக்கர்கள் நம்புகின்றனரா?

தமிழர்களுக்கு எதிரான போரை தயார் செய்வதற்கு எவ்வளவு காலம் எடுத்தது? தமிழர்களை வடக்கு-கிழக்கில் தமிழீழத்தை அமைத்தால் அதனால் சிங்களவர்களுக்கு என்ன பிரச்சினை? வடக்கு-கிழக்கில் சிங்களவர்கள் வசிக்கிறார்களா? வடக்கு - கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்ததாகக் கூறப்பட்டாலும் அவர்கள் தமிழ் பௌத்தர்களே என சுனில் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். சிங்களம் ஆறாம் நூற்றாண்டின் பின்னர் உருவான மொழி. மகாவம்சம் எழுதப்பட்ட காலத்தில் இலங்கையில் சிங்களவர்கள் இருக்கவில்லை. மகாநாயக்கர்களாகிய நீங்கள் பிரிவினை பற்றி கவலைப்படுவதாக இருந்தால், அது நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக தமிழர்களை அரசமைப்பு ஊடாக வன்முறை மூலம் கட்டுப்படுத்த முயற்சிக்கிறீர்களா? அக்கனிச் சூத்திரமும், தீர்க்க நியாயவும் இதையா போதிக்கின்றன?தமிழர்கள் சர்வதேச சட்டங்களுக்குட்பட்ட உரிமைகளை அனுபவிக்கும் சுதந்திரத்தையே கோருகின்றனர்.

காணி, பொலிஸ், தொல்பொருள் பிரதேசங்கள் போன்றவற்றை மாகாணங்களுக்கு வழங்காவிட்டால் வடக்கு-கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக பிரதேசங்கள் எதுவித சுதந்திரமுமின்றி மத்தியால் ஆளப்பட வேண்டுமா? (இம்சை செய்யப்படவேண்டுமா?)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது பிரிவினைக்கு வழிவகுக்காது. மத்தியின் கீழ் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக மத்தியின் முகவர்போன்றே அவை இருக்கும். முன்னாள் ஜனாதிபதிகள் ஏன் பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால், அதற்கு அவர்களின் குறுகிய பார்வையே காரணம். 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று முட்டாள்தனமாகக் கூறியவர் ஜே.ஆர்.

ஜனாதிபதி நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவேண்டுமெனக் கூறுகிறீர்கள். இறைமை என்றால் என்ன? வடக்கு-கிழக்கில் தமிழர்கள் காலாதிகாலமாக வாழ்ந்து வருகின்றனர். பிரித்தானியர்கள் தமது நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக நாட்டை ஒன்றிணைத்தனர். பிரித்தானியர்களிடம் இழந்த இறைமையை பெற்றுக்கொள்வதற்காக தமிழர்கள் போராடி வருகின்றனர்.

வல்லரசுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடாது எனக் கூறுகிறீர்கள். பொருளாதார நெருக்கடி ஏன் ஏற்பட்டது? போருக்கென பெருந்தொகைப்பணம் செலவிடப்பட்டதாலேயே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் அரச நிர்வாகம் அரசியல் மயப்படுத்தப்பட்டமையும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். சீனாவின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்ததும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணம். இப்போது ஏனைய நாடுகள் இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கின்றன. உங்களைப்போன்ற நல்லுள்ளம் படைத்த மகாநாயக்கர்கள் ஏன் இதை புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்?

டி.எஸ்.சேனநாயக்கா, இலங்கையை ஒற்றை ஆட்சி கட்டமைப்புள்ள நாடாக ஆக்குவதற்காக ஓ.ஈ.குணதிலகவை இங்கிலாந்துக்கு அனுப்பினார். ஒற்றை ஆட்சி முறையின்கீழ் சிங்களவர்கள் முழுநாட்டையும் ஆட்சி செய்யத்தொடங்கினர். சிங்களவர்கள் தமிழர்களைக் கட்டுப்படுத்தினர். வடக்கு - கிழக்கில் தமிழர்கள் 3 ஆயிரம் ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். தமிழ், சிங்கள, முஸ்லிம் வரலாற்றாசிரியர்களை வைத்து வரலாற்றை எழுதுங்கள் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தால்கீரைச் செய்கை நாசம்

யாழ்ப்பாணம், பெப்.10 கடந்த வாரம் பெய்த பெருமழையால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கீரைச் செய்கை அழிவடைந்துள்ளது என கீரைச்செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். கோப்பாய், நீர்வேலி, இடைக்காடு, புத்தூர், சிறுப்பிட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் பயிரிடப்பட்ட கீரைகள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்துள்ளன. இதன்காரணமாக சந்தைகளில் அவற்றின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது. திருநெல்வேலி சந்தையில் ஒருபிடி கீரை 130 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## புலமையாளர்கள் கௌரவிப்பு

கொடிகாமம் பெப் 10 வரணி மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ப-159)


## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 255 0807

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதி தேவை. (பெண்கள்)

தொடர்பு: 077 6354 224

## வாடகைக்குத் தேவை

அலுவலக தேவைக்கு உகந்த கடை அல்லது வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ். நகரிலிருந்து கொக்குவில் மட்டும்)

தொடர்பு : 075 283 5127
077 078 1818

## உடன் வேலைவாய்ப்பு

- விற்பனை பிரதிநிதிகள்
- இனிப்பு வகைகள் உற்பத்தி செய்யத் தெரிந்தவர்கள் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்பு:
077 3135 195, 077 959 4326

## வீடு வாடகைக்குத் தேவை

மல்லாகம், சுன்னாகம் பிரதேசத்தில் வீடு தேவை.

T.P.: 077 695 6683

## விற்பனைப் பிரதிநிதி தேவை

கோண்டாவிலில் இயங்கும் உள்ளூர் உற்பத்தி நிலையத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 301 6834

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கனகபுரம், கிளிநொச்சியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. வீட்டுடன் தங்கி நின்று பணிபுரியக்கூடிய 50 வயதிற்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

074 003 6759, 070 368 9600

## வேலையாள்கள் தேவை

**உணவகம்** ஒன்றிற்கு பணிபுரிவதற்கு வேலையாள்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)

K.K.S வீதி, தாவடி சந்திக்கு அருகாமையில்

தொடர்பு: 077 804 2561

## NEW SCIENCE WORLD
### கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

NEW SCIENCE WORLD VICTORY MUST

**2023 Revision Classes**
**Tamil And English Medium**

**Zoom** இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| Physics | R.Kumaran<br>R. Kugen |
| Chemistry | Dias<br>K.T.Sivakumar |
| Bio | N.T. Gajenthiran |
| Com.Maths | K. Ainharan<br>G.V. Khariharan |

**ஆரம்பம் :- 23.02.2023 (வியாழக்கிழமை)**

**10.02.2023 ஆம் திகதி தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படும்.**

**Zoom** இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:-
021 221 6690, 077 336 4030,
075 836 4055, 077 336 4055

அலுவலக நேரம் :- 8.00am - 5.00pm

## வீடு விற்பனைக்கு

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோவில் தெற்குபுறம்**

- சகல வசதிகளுடன் கூடிய தரமாகவும், அழகாகவும்
  1. கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய வீடும்
  2. கட்டப்பட்டுக் கொண்டிருப்பதுமான புதிய மேல்மாடி வீடும்
- உத்தரவாதத்துடன் நியாயமான முறையில் விற்பனைக்கு உண்டு. இவ் வீடுகள் விலை தொடர்பில் சில தரகர்களால் தவறான தகவல்கள் பெற்றுள்ளவர்களும் நேரில் தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு: 077 958 3944

## மணப்பெண் தேவை

**பின்வரும் கௌரவகுலம் (K), இந்து மாப்பிள்ளைகளுக்குப் பெண் தேவை.**

01. சுன்னாகம் - சாவகச்சேரி. 1996. மிருகசீரிடம். BEng (Hons), Software Engineer, Australia Citizen.
02. மானிப்பாய் - சண்டிலிப்பாய். 1988. ஆயிலியம். Chef, USA Citizen.
03. சுன்னாகம். 1979. பூரட்டாதி. B.Com, UK Citizen.
04. பளை. 1988. அனுசம். Inventory Dipartment Officer, Canada Citizen.
05. இளவாலை. 1990. அத்தம். BSc Software Engineer, Singapore Citizen.
06. தெல்லிப்பளை. 1990. அச்சுவினி Mechanical Engineer UK Citizen.
07. சுன்னாகம் - உடுவில். 1983. புனர்பூசம். Graduate, Network Operation Engineer USA Citizen Divorce
08. சுன்னாகம் - சாவகச்சேரி. 1988. பூராடம். MSc in IT, Newzealand Citizen.
09. மூளாய். 1983. உத்திரட்டாதி . Restaurant Chef France Citizen.
10. ஆவரங்கால் - பருத்தித்துறை. 1979. உத்திராடம். Acca, Accountant, UK Citizen.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
போன் - 077 539 3728

## மணப்பெண் தேவை

**பின்வரும் இந்து, குருகுலம் மாப்பிள்ளைகளுக்குப் பெண் தேவை.**

01. கோண்டாவில் - மானிப்பாய். 1979. திருவாதிரை. BIT, Business, UK, citizen.
02. சுன்னாகம். சங்கானை. 1981. அச்சுவினி. A/L, Company work, France Citizen.
03. மயிலிட்டி. 1981. அத்தம். Accountant USA Citizen
04. ஆனியவளை. 1983. பரணி. Sale Assistant, UK citizen
05. பருத்தித்துறை - ஏழாலை. 1987. திருவாதிரை. BEng Power and Control Engineer, UK citizen
06. வேலணை. 1976. பரணி. Software Engineer, UK citizen, Divorce.
07. புதுக்குடியிருப்பு. 1979. பூரம். BSc (Hons), Computer Engineer, Swiss citizn.
08. கரையூர் - பருத்தித்துறை. 1976. ஆயிலியம். Cook, France citizen, Divorce
09. திருகோணமலை - யாழ்ப்பாணம். 1980. கேட்டை. Private Logistics, Australia Citizen, Divorce.
10. மயிலிட்டி. 1981. அத்தம். Business Managment, USA citizen.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## குத்தகைக்கு / வாடகைக்கு

யாழ்.குருநகர் பற்றிக்ஸ் வீதியில் 800 சதுரஅடி கொண்ட ஃபூட் சிற்றி அனைத்துப் பொருட்களுடனும் வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும்.

076 855 6300
077 053 5121




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.